RECEIVED
5-11-1986

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

வலரி 28 ஐப்பசி 19 ரபிஅவ் 2 இதழ் 267

யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-11-1986

அரச வைத்திய சங்க குழுவினர் ஷெல் தாக்கிய பகுதிகளையும் காயமுற்றோரையும் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், புதன் கோட்டை முக மிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்த யாழ். ஆஸ்பத்திரிக் கட்டிடங்களையும், காயமடைந்து வார்ட்டுகளில் சிகிச்சைபெற்று வருபவர்களையும் கொழும்பிலிருந்து நேற்று வந்த வைத்திய அதிகாரிகள் சங்கக் குழுவினர் பார்வையிட்டனர்.

இக்குழுவில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர் ஸ்ரன்மோடி அல்விஸ், செயலாளர் டாக்டர் ரத்தினபிரியா, சங்க உறுப்பினர் டாக்டர் எஸ். பியரிஸ் ஆகியோர் வந்திருந்தனர்.

இக்குழுவினர் விமானத்தில் பலாலியை வந்தடைந்து அங்கிருந்து அவர்களை யாழ். வைத்திய அத்தியட்சகர், ஆஸ்பத்திரிக்கு அழைத்துவந்தார்.

இக்குழுவினர் யாழ். ஆஸ்பத்திரியில் ஷெல்களினால் சேதமடைந்த இடங்களையும், காயமடைந்து வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களையும் பார்வையிட்டனர்.

காயமடைந்த சிங்களவர்

25ம் வாட்டிற்கு நண்பகல் வந்த குழுவினர் அங்கு கட்டிலில்கிடந்து உணவருந்திய ஒரு

(5ம் பக்கம் பார்க்க)



அரசினர்வைத்திய அதிகாரிகள் சங்க தலைவர் டாக்டர் ஸ்ரன்மோடி அல்விஸ், செயலாளர் டாக்டர் ரத்னபிரியா, சங்க உறுப்பினர் எஸ் பியரிஸ் ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரிக்கு நேற்று விஜயம் செய்ததை முதலாவது படத்திலும், மருத்துவ பீட மாணவர்கள் சூலோக அட்டைகளுடன் ஆஸ்பத்திரி வளவில் நிற்பதை இரண்டாவது படத்திலும், வெளிநோயாளர் பகுதி நேற்று நோயாளர் எவருமின்றி வெறிச்சோடி இருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படம் தேவா)

"அரசின் சமரசயோசனைகளை தமிழர்கள் ஏற்காவிட்டால் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கைகளெடுக்கப்படும்" ஜனாதிபதி ஜே. ஆர்.

கொழும்பு, செவ்.

"அரசாங்கம் தெரிவித்துள்ள சமரச யோசனைகளை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால், நாட்டில் நடைபெற்றுவரும் வன்முறைகளைத் தணிர்ப்பதற்கும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், உரிய நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை"

இவ்வாறு ஜனாதிபதி ஜயவர்தனே நேற்றுத் தம்மைச் சந்தித்து உரையாடிய இந்திய உயர் ஸ்தானிகர் ஜே. என். தீக்ஷித்திடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தம்மால் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் ஏதாவது திருத்தம் செய்யவேண்டுமிருந்தால் ஐக்கிய இலங்கை என்ற கட்டுக்கோப்பிற்குள் அதனைத் தான் நிறைவேற்றியமைக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

புதுடில்லியில் இந்திய அரசிடமும், சென்னையில் தமிழக

(8ம் பக்கம் பார்க்க)

மட்டு. நகரில் ராணுவம்மீது பி.எல்.ஏ. 'கோன்சார்ஜ்' தாக்குதல்

நான்கு பேர் பலி; நால்வர் காயம்

யாழ்ப்பாணம், புதன் மட்டுநகரில் இராணுவ போக்குவரத்து தொடர்வண்டி மீது தமது மக்கள் விடுதலைப் இராணுவத்தினர் 'கோன்சார்ஜ்' தாக்குதல் அருகாமையில் தல் மேற்கொண்டதில் இரா

(5ம் பக்கம் பார்க்க)

"ஹர்த்தால் வேண்டாம் துக்கம் அனுஷ்டிக்கவும்"

யாழ்ப்பாணம், புதன் யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பலியான யாழ் மத்திய கல்லூரி மாணவத் தலைவன் விபுலானந்தனுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ் குடாநாடு பூராவும் ஹர்த்தால் அனுஷ்டிக்காது

(8-ம் பக்கம் பார்க்க)

ஸ்பெயின் பொலிஸாரால் இலங்கையர் சுட்டுக்கொலை

மெட்ரிட், நவ-4 இலங்கையர் ஒருவரை ஸ்பெயின் போதைவஸ்து கடத்துபவர் என்று பொலிசார் சுட்டுக்கொன்றனர் என நினைத்துத் தவறுதலாக இங்கிலாந்தில் வசித்துவரும்

(5ம் பக்கம் பார்க்க)

யாழ். நோக்கிப் புறப்பட்ட படையினர் கிளிநொச்சியுடன் அனுராதபுரம் திரும்பினர்

வவுனியா, செவ் அனுராதபுரத்திலிருந்து கிளிநொச்சி வந்தடைந்த இராணுவ அணி மீண்டும் அனுராதபுரம் திரும்பியுள்ளது.

70க்கு மேற்பட்ட வாகனங்கள் சகிதம் மேற்படி படையினர் யாழ் செல்ல திட்டமிட்டபோதும் கிளிநொச்சியுடன் தமது திட்டத்தினை கைவிட்டு மீளவும் அனுராதபுரம் திரும்பியுள்ளார்கள் என தெரியவருகின்றது கிளிநொச்சிக்கு அப்

(8ம் பக்கம் பார்க்க)

மக்கள்வங்கி இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன் யாழ். நவீனசந்தைக் கட்டடத்தில் இருந்த மக்கள் வங்கிக் கிளை அலுவலகம் அதே கட்டடத்திலுள்ள ட்ரான்ஸ்லங்கா இருந்த பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (மா)

கிரஹப்பிரவேசம்

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் ஐப்பசித் திங்கள் 21-ம் நாள் 7-1186 வெள்ளிக்கிழமை பகல் 1-17 முதல் 2-05 வரையிலான கும்பலக்கின சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

"பூவாசம்"

என்னும் புதுமனையில் பிரவேசம் செய்ய திருவருள் கைகூடப் பெற்றமையால் அவ்வமையம் தாங்களும் குடும்ப சமேதராராய் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி வே. பூபாலசிங்கன்.

53, 55, (27) மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(A-3061)

கோட்டை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலால் மக்கள் வங்கி தீப்பற்றியது

இரு வர்த்தக நிலையங்கள் பலத்தசேதம்

நால்வர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், புதன் யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரால் நேற்று முன்தினம் இரவு ஏவப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களினால் யாழ் நவீன சந்தைக் கட்டிடத்தில் உள்ள மக்கள் வங்கியும் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இரு வர்த்தகநிலையங்களும்பலத்த சேதத்திற்குள்ளாயின.

யாழ் நவீன சந்தைக் கட்டிடத்தில் உள்ள மக்கள் வங்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

கனரக மின்துளை யந்திரம், பெரிய கோவில் மணிகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 5547]

நல்ல நிலையில் உள்ள நஷனல் T V 20'' டெக் N V 300 ஜெனறேற்றர் ஜமகா தொடர்புள்ள ஷதீஸ் றெக்கோடிங் ஸ்ருடியோ 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் [C5559]

நீராழிவு வியாதிகளுக்கு உகந்த வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கோதுமை அரிசி குறுணல் விற்பனைக்குண்டு. M G M, 777 K K S. Road and 208, 1-st Cross St., Jaffna. ரெலிபோன்:22611 (C-5066

Bairaha Farms Broilers கோழி இறைச்சியும், John Keels இன் பதப்படுத்தப்பட்ட இறைச்சி உணவு வகைகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வடமாகாண அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்; The Medical Hall No: 224, Hospital Road, Jaffna Phone; 22575. C 5557

தேவை

அலுமினிய பாத்திரங்களை செய்யக்கூடிய ஸ்பின்னர்கள் தேவை. நேரில் வரவும். பேலி மெற்றல் இன்டஸ்ரீஸ் 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். C 5574

யாழ்ப்பாணத்தில் அமைக்கவிருக்கும் ஒரு நிறுவனத்திற்கு சிறுதொகை பங்காளர்கள் தேவை. எழுத்து மூலமான விண்ணப்பங்கள் 15-11-86 வரை ஏற்றுக்கொள்ளப்படும். 426/2, கிட்னர் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். C 5360

யாழ் நகரில் உள்ள பிரபல ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள டெலி டிகிதர் கீழ்க்காணும் தகைமையில் தேவை. க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தவரும், கணக்கியலில் அனுபவமுடையவரும் ஆங்கிலம் எழுத வாசிக்கக்கூடியவரும், தட்டெழுத்து வேகமுடைய வரும் முன் அனுபவங்களையும் தகைமைகளையும் குறித்து 20 வயதிற்கும் 30 வயதிற்குமிடைப்பட்டோர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3050 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். C 3050

சேவை

கைரேகை, எண்சோதிடம் கிரகநிலை விபரமாகப்பார்த்து உண்மைநிலை சொல்லப்படும். இதுதவிர மணமகன், மணமகள் தேவையானவர்களும் உடன்தொடர்புகொள்ளலாம். செவ்வாய் குற்றமுள்ள சாதகர்களுக்கு முதலிடம் உண்டு. செ. நாகேந்திரராசா, 174/16, கோவில்வீதி, (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்நகர். (C-5499)

வகுப்புகள்

108 Brown Road A/L 87 இரசாயனம் மீட்டல் வகுப்பு ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 8 11-86 சனி 2-30 p m வகுப்பு நேரம் சனி, ஞாயிறு 2-30 - 4-30 p. m. [C 5575]

108 Brown Road A/L 88 வெப்ப இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 8-11-86 சனி 6-15 a m. வகுப்பு நேரங்கள் சனி, ஞாயிறு 6 15 a m C 5576

Radio, T.V, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைண்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகின்றன தொடர்பு Vispa Engineering Aid Hall No 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C 5544]

கல்வி

Radio, TV. and Electronic Engineering. Electric wiring. Motor Rewinding வெளிநாடுகளில் கடமையாற்றிய பொறியியலாளரால் வகுப்புகள் நடாத்தப்படுகிறது தொடர்பு கொள்க. நிமல் ராச் மூதலியார் வளவு சுசைப்பர் கோவிலடி, அச்சுவேலி. C 5569

Spoken English with Grammer ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க - ஐந்து மாதப் பயிற்சி பட்டதாரி ஆசிரியர் தொடக்கம்: ஆண்கள் நவம்பர் 10. பெண்கள் - நவம்பர் 12. உடன் பதிவு செய்க. Ranjith Tuitory, 12, Ice Plant Road, Gurunagar Jaffna. C 5573

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை, கூறுவிலைகள்

கீழ்க்காணும் வேலைகளுக்கான கூறுவிலைகள்:

கீழ்க்காணும் வேலைகளுக்கான கூறுவிலைகள் 14-11-1986ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 50/- செலுத்தி கூறுவிலைப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் 12-11-86ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர் விண்ணப்பத்தை செலுத்தவேண்டியதில்லை.

1. சபைக்குத்தேவையான படிவங்கள், பதிவேடுகள் முதலியன அச்சிட்டு விநியோகித்தல்.

2. நாரந்தனை, ஊர்காவற்றுறை ஆகிய உப அலுவலகங்களுக்குத் தேவையான 27'/29' மின்கம்பங்களை காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து கொண்டுவந்து விநியோகித்தல்.

கே. இராமநாதன்,
பிரதேச் செயலாளர்,
மாவட்டச் செயலாளருக்காக,
அபிவிருத்திச் சபை,
அலுவலகம்,
செம்மணி,
(A3006) யாழ்ப்பாணம்.

வேலணையில் கால்நடை வளர்ப்போர் சங்கம் உதயம்

வேலணை, செவ். வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவை உள்ளடக்கிய கால்நடை வளர்ப்பாளர் சங்கமொன்று வேலணையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கால்நடை வளர்ப்பாளர் சங்கத்திற்கு நயினாதீவு, புங்குடுதீவு வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களிலுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்தும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களும் உள்ளடக்கிய விதத்தில் சங்கமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவர் வேலணை உதவி அரசாங்க அதிபர் தா. சந்திர

MATRIMONIAL

Bachelor with Government pen ion (Rs. 1100/-) and own house seeks partner for marriage. (Hindu Vellala, Manipay. 40years 2-11-1946 5' 9'', Mars in 2nd general y Vegetarian) Please write Advt No:C 5526C/o Eelanadu Jaffna. C 5526

Elder brother of two doctors working in foreign countries one having Mars is anxious to contact respect ble families with eligible brides who are graduates or well accomplished with good educational background. Parients who have tall and fair daughters around the age of 25 please write in confidentially with full particulars in the first instances No brokers please Advt No. C 5579 C/o Eelanadu Jaffna. C 5579

சுன்னாகம் மின்சார நிலையம்

பகிரங்க ஏலவிற்பனை

பாவித்த பாவித்துக் கழித்த என்ஜின் ஹெட்கள், லேனர்கள், பிரேன்கள், மின்சார உபகரணங்கள், வாகன பற்றரிகள், டயர்கள், ரோச்சுக்கள், பூட்டுக்கள், கதிரைகள், அடுப்புக்கள், றப்பர்சாதனங்கள், கருவிகள் (Tools) இன்னும் பல பொருட்கள் 7-11-86 வெள்ளிக்கிழமை, காலை 10 00 மணிக்கு மின்சார நிலையத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலத்திற்கு வருபவர்கள், தகுந்த அடையாளங் காட்டி வாசலில் உள்ள புத்தகத்தில் கையொப்பமிட்ட பின்பே, உள்ளேவர அனுமதிக்கப்படுவர்.

ஏலத்தில் பொருட்களைப் பெற்றவர்கள், முழுப் பணத்தையும் நிலைய பிரதம லிகிதரிடம் பணமாகக் கட்டிய ஆதாரத்தைக் காட்டி, பொருட்களை உடன்வெளியில் எடுத்துச் செல்லவேண்டும். தவறின் அவரது கேள்வி நிராகரிக்கப்படும்.

மேற்படி ஏலத்தில் பெற்ற கூறுவிலையை ஏற்கவோ நிராகரிக்கவோ, நிலையப் பொறுப்பு மின் பொறியியலாளருக்கு உரிமை உண்டு. இந்த ஏல விற்பனை சம்பந்தமான எந்த விடயத்திலும் நிலையப் பொறுப்பு மின் பொறியியலாளரின் தீர்ப்பே இறுதியாகும்.

செ. சிவன்நேசன்
மின் பொறியியலாளர்.
சுன்னாகம் மின்சார நிலையம்.
(A3059)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் பொதுநூல் நிலையத்தின் இரவல் கொடுக்கும் பகுதியிலிருந்து இரவலாகப் பெற்றுக் கொண்டு, ஒரு மாதத்திற்கும் மேலாகத் திருப்பி ஒப்படைக்காமல் வைத்திருக்கும் புத்தகங்கள் அனைத்தையும் 20-11-86ந் திகதிக்கு முன்பாக நூலகரிடம் திருப்பிஒப்படைக்குமாறு அன்புகத்தவர்களை அன்போடு வரையும் தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

20-11-86ந் திகதிக்கு முன்பு புத்தகங்களைத் திருப்பி ஒப்படைக்காத அங்கத்தவர்களினதும் இவர்களது பிணையாளர்களினதும் பெயர் விபரப் பட்டியல் இப்பத்திரிகையில் விளம்பரப் படுத்தப்பட்டு, அங்கத்தவர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதென்பதையும் மனவருத்தத்துடன் இத்தால் அறியத்தருகின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
(தலைவருக்காக)
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
(C 3053)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபை

கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபையின் பிரதேசங்களில் அமைந்துள்ள பின்வரும் உப அலுவலகங்களுக்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைகள் ஆகியவற்றை 1-1-87 தொடக்கம் 31-12-87 வரைக்கும் குத்தகைக்கு எடுத்து நடாத்துவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 26-11-86 பி ப. 2 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இத் நிலையங்களுக்கான கேள்விப் படிவங்களை 10-11-86 காலை 9 00 மணி தொடக்கம் 25-11-86 பி ப. 4-00 மணி வரை சம்பந்தப்பட்ட உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 26-11-86 பி ப. 2.15க்கு மாவட்ட அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர்கள் சமுகமளிப்பது விரும்பத்தக்கது.

மேலதிக விபரங்களை கீழ்வரும் உப அலுவலக அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1, முள்ளியவளை உப அலுவலகம்
2 செம்மலை உபஅலுவலகம்
3 துணுக்காய் ,,
4 பாண்டியன்குளம் ,,
5 ஒட்டுசுட்டான் ,,
6. ஒலுமடு ,,
7. முள்ளிவாய்க்கால் ,,
8. புதுக்குடியிருப்பு ,,

க. பொன்னம்பலம்.
கேள்விச்சபைத் தலைவரும்,
மாவட்டச்செயலாளரும்,
மாவட்ட அபிவிருத்திச் சபை,
(A3049) முல்லைத்தீவு.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற நவாலியைச் சேர்ந்த சிவகுரு நடராசா பெனடிக்ட் மங்களாம்பிகையின் மரண சாதனமில்லா மரணச் சொத்திற்கான தத்துவப் பத்திரத்திற்கான விண்ணப்ப விடயத்தில்.

(காலஞ்சென்றவர்) முதலியார் வைத்திலிங்கம் மகேசன், நவாலி -மனுதாரர்.

1 மகேசன் கணேசன்
2 மகேசன் நடேசன்
3 மகேசன் புவனேந்திரன்
4. நாகமுத்துஈஸ்வரி
5 பெண் லலிதாம்பிகை பராயமற்றவர்
6. வரதராசா மகள் இஷானி
7. வரதராசாசைம்பெண் வசந்தமலிலிகை எல்லோரும் நவாலி:
5ம் எதிர்மனுதார் பராயமற்றவர் அவரது பாதுகாவலர் 6ம்எதிர்மனுதார் மூலமாக
8. சிவகுரு நடராஜா, பெரியவிளான் -எதிர்மனுதார்கள்.

மகேசன் கணேசன், சுலைமான் ரெறேஸ், கொழும்பு (மனுதார் (1ம் எதிர் மனுதாரர்)

வழ. இல: ரி /3845

எதிராக

1 மகேசன் நடேசன், பான்சி பிலேஸ், கொழும்பு
2 மகேசன் புவனேந்திரன் சுலைமான்
3 நாகமுத்துஈஸ்வரி
4. பெண் லலிதாம்பிகை பராயமற்றவர்:
5 வரதராசா மகள் இஷானி
5ம் எதிர்மனுதார் அவரது பராயமற்றவர் அவரது பாதுகாவலர் 6ம் எதிர்மனுதார் மூலமாக
6. வரதராசாசைம்பெண் வசந்தமல்லிகை எல்லோரும் நவாலி
7. சிவகுரு நடராசா பெரியவிளான் -எதிர்மனுதார்கள்.

மேலே இலக்கங்கொண்ட மரணசாதனம் வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 7ந் திகதியன்று காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுமுழுதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஐப்பசிமாதம் 24ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது:
வ. மயில்வாகனம்,
மனுதாரின் சட்டத்தரணி. (C 5565)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கரக்குவா-'கொன்ற்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு

அமெரிக்க உதவியை எதிர்த்து ஐ. நா.வில் தீர்மானம்

நியுயோர்க், நவ 4

நிக்கரகுவாவின் 'கொன்ற்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு உதவுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்ற சர்வதேச நீதி மன்றின் தீர்ப்பை அமெரிக்கா ஏற்க வேண்டும் என ஐ. நா. சபையில் தீர்மானமொன்று நேற்று நிறைவேற்றப்பட்டது. 94 நாடுகள் இதற்கு ஆதரவாக வாக்களித்தன. 47 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. 3 நாடுகள் எதிராக வாக்களித்தன.

நிக்கரகுவா அரசுக்கு எதிரான வலதுசாரி 'கொன்ற்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகளையும் பொருளாதார உதவிகளையும் வழங்கி வருகின்றது.

சர்வதேச நீதிமன்றம் இந்த உதவிகள் தொடர்பாக வழங்கிய தீர்ப்பொன்றில் அமெரிக்கா 'கொன்ற்ராக்'களுக்கான உதவிகளை நிறுத்தவேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ளது.

ஆனால் இந்தத் தீர்ப்பை அமெரிக்கா ஏற்க மறுத்தது இதையடுத்து ஐ நா. பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது இத் தீர்ப்பை அமெரிக்கா ஏற்க வேண்டுமென 94 நாடுகள் வாக்களித்தன.

எல்சல்வடோர், இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளே எதிர்த்து வாக்களித்த நாடுகளாகும். 47 நாடுகள் வாக்களிப்பில் பங்கு பற்றவில்லை.

இந்திய ஒலிபரப்பு:
முன்னாள் தமிழ்ச்சேவை அறிவிப்பாளர் மரணம்

புதுடில்லி நவ 4

அகில இந்திய ஒலிபரப்புச் சேவையின் இளைப்பாறிய பெண் தமிழ் அறிவிப்பாளர் ஒருவர் மர்மமான முறையில் மரணமாகியுள்ளார்.

செல்வி லக்ஷ்மி பூர்ணம் (வயது 58) என்பவரே இப் பெண்மணியாவார். இவர் தெற்கு டில்லியிலுள்ள இவரது தொடர் மாடி வீட்டில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவரின் மரணத்துக்கான காரணங்கள் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை. புதுடில்லிப் பொலிஸார் லக்ஷ்மி பூர்ணத்தின் மரணம் தொடர்பாக விரிவான புலன் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். திருமதி லக்ஷ்மி பூர்ணம் சுமார் 30வருடகாலமாக இந்திய ஒலிபரப்புச் சேவையின் வெளிநாட்டுப் பிரிவில் கடமையாற்றியவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கராச்சி கலவரங்கள்
44 பேர் மரணம்

கராச்சி, நவ 4

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இடம்பெற்றுவரும் இனக் கலகங்களில் இறந்தோர் எண்ணிக்கை சுமார் 44ஆக உயர்ந்துள்ளது

நேற்றைய கலகங்களில் சுமார் 8 பேர்வரை கொல்லப்பட்டனர் கடந்த 4 தினங்களாக மஹாஜிர், பட்டன் ஆகிய இரு இனங்களுக்கு மிடையிலேயே இக்மோதல்கள் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விருசாராரும் துப்பாக்கிப்பிரயோகம், தீவைப்பு ஆகியவற்றில் தீவிரமாக இறங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இம் மோதல்களையடுத்து கராச்சி நகரில் போடப்பட்ட ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. சுமார் 400 க்குமதிகமானவர்கள் இம் மோதல்களில் படுகாயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான விபத்தில் 90 இராணுவம் பலி

தெஹரான், நவ 4

கிழக்கு ஈரானில் 90 இராணுவவீரர்களை ஏற்றிச் சென்ற ஈரானிய இராணுவ போக்குவரத்து விமான மொன்று விழுந்துநொறுங்கியதில் அதிலிருந்த அனைவரும் கொல்லப்பட்டனர்

ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய ஈரானிய எல்லைப்பகுதியில் உள்ள நகரொன்றின் அருகே இந்த சி—130 ரக விமானம் விபத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது

விமானத்திலேற்பட்ட இயந்திரக்கோளாறே இந்த விபத்திற்கான காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னைச் சம்பவம்:
சந்திரகாஸன் கண்டனம்

சென்னை, நவ 4

தமிழ்ப் போராளிகள் குழு ஒன்று கடந்த சனிக்கிழமை சென்னையில் ஒருவரை சுட்டுக் கொன்றதை தமிழீழ பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் திரு. எஸ் சந்திரஹாஸன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கையில் சுட்டுக்கொல்வதற்கு காரணம் ஏதாயிருந்தாலும் மொத்தத்தில் இதுநியாயமற்றது. இலங்கையில் தமிழ்மக்களின் போராட்டத்திற்கு இது தீங்குவிளைவிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (பி)

விவசாயப் பொருள்கள் விநியோகம்

பருத்தித்துறை, செவ்.

வடமராட்சிப்பகுதி விவசாயிகளின் நன்மைகருதி புலோலி அம்பன் கமலச்சேவை நிலையங்கள் விவசாயிகளுக்கான உரவகைகள், மருந்துவகைகள் விதைவகைகள் பயன்தரு மரங்கள் என்பவற்றைக் குறைந்த விலையில்விநியோகம் செய்துவருகின்றன.

இறக்குமதிசெய்யப்பட்ட மண்வெட்டிகளும் இப்பகுதிகளில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. [எ]

கல்வி டிப்ளோமா நேர்முகப் பரீட்சை

உடுவில் செவ்.

யாழ் பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை பயில்வோருக்கான 1986 ம் 87ம் ஆண்டுக்குரிய நேர்முகப் பரீட்சைகள் இன்று 5ம் திகதி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளன.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களுக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன:

நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பல்கலைக் கழக கலைப்பீட அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. [எ]

வட்டக்கச்சி
மத்திய வித்தியாலய சாதனை

யாழ்ப்பாணம், புதன் அண்மையில் வெளியாகிய க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி மத்திய வித்தியாலயத்தின் பெறுபேறுகள் முன்னணி வகிக்கின்றன.

இப்பாடசாலையிலிருந்து கலைப்பிரிவுக்கு 18 மாணவர்கள் தோற்றினார்கள். இவர்களுள் 15 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி பெறும் தகைமை பெற்றுள்ளனர்

இப் பாடசாலையின் மாணவியான செல்வி வி சர்வலாதேவி ஏ, பி, சி, எஸ் வும். செல்விகள் ச. பெனடிற் மாலினி, வி. சதியவதனி, எஸ் புஸ்பராணி ஆகியோர் 2 பியும் 2 சியும் பெற்றுள்ளனர். தமிழ் பாடத்தில் நூற்றுவீதசித்தியையும், இந்துநாகரீக பாடத்தில் தொன்நூற்றுஐந்துசதவீதசித்தியையும் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலை வட்டக்கச்சி ம. வி. கொதிதனி அமைப்பின் மூலாதாரப் பாடசாலை யென்பது குறிப்பிடத்தக்கது. (பி)

புதிய மொசாம்பிக் ஜனதிபதி தெரிவு

மபுட்டோ, நவ 24

மொசாம்பிக்கின் புதிய ஜனதிபதியாக திரு. ஜோக்கிம் செஸனே (வயது 47) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. செஸனே மொசாம்பிக்கின் வெளி விவகார அமைச்சராக இதுவரை காலமும் பணியாற்றி வந்தார் அத்துடன் 1974ம் ஆண்டிலிருந்து 75ம் ஆண்டு வரை இடைக்கால பிரதமராகவும் இவர் கடமையாற்றினார்.

பல மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடியவரான இவர், மொசாம்பிக்கின் பிறிமில் ஆட்சிப்பீடத்தினால் நேற்று ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

போர்த்துக்கலுக்கு எதிரான சுதந்திர போராட்டத்தின்போது மொசாம்பிக்கின் அதிபர் சமோராமஷேலின் நெருங்கிய சகாவாக இவர் இருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மொசாம்பிக் சுதந்திரமடைந்தது முதல் அந்நாட்டின் வெளிநாட்டமைச்சராக இருந்த புதிய அதிபர் திரு. ஜோக்கிம் செஸனே பரந்தளவிலான வெளிநாட்டுத்தொடர்பு கொண்டிருந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மொசாம்பிக் அரசாங்கத்துக்கு பெரும் சவாலாக இருந்து வரும் மொசாம்பிக் வலதுசாரிக் கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளை கடுமையாக எதிர்க்கப்போவதாக இவர் உறுதியளித்துள்ளார்.

கூட்டுறவு சங்கம்

அராலி, செவ்.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் சிக்சன சடனுதவி கூட்டுறவு சங்க மூலமே எமது பொருளாதார முன்னேற்றத்தைக் காணலாம். பின் தங்கிய கிராமத்தவர்களாகிய எம்மவர்களது சஷ்ட்டங்கள் நீங்கவும் வீட்டு வசதிக் கடன்கள் ஆகியன பெறவும் கூட்டுறவு நாணய சங்கங்கள் பெரும் பங்களிக்கின்றன.

இவ்வாறு பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பூ. சிங்காரம் அராலி வடக்கு சிக்சன கடனுதவிக் கூட்டுறவு சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து ஆரம்ப உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

நிர்வாகசபை தெரிவின் போது ச. முத்தக்குமாரு தலைவராகவும் இ. அருமை நாயகம் செயலாளராகவும் எஸ் வி. இராசரத்தினம் உபதலைவராகவும், மு பத்மநாதசிவம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 7பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அரிய சந்தர்ப்பம்!



Computer Programming and Data Processing

BASIC LANGUAGE

புதிய வகுப்புகள் ஆரம்பம்:

9-11-86 சனி/ஞாயிறு வகுப்புகள் 3 மாதம்

10-11-86 திங்கள்/புதன்/வெள்ளி வகுப்புகள் 2 மாதம்

மொத்தக் கட்டணம் 750/- மட்டும்

சேரும்பொழுது செலுத்தவேண்டியது 500/- மட்டும்.

ஒவ்வொரு மாணவருக்கும் சிறந்த கம்பியூட்டர் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் அச்சிட்ட தமிழ் மொழி பெயர்ப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

Unikco Computer Centre

(சுதுமலைச் சந்தி)

282, யாழ்ப்பாணம் ரோட், மானிப்பாய்.

(C-5562)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனித வாழ்வில் எதுவும் சாசுவதமல்ல. எனவே செல்வம் வந்தபோது பெருமையும், கஷ்டம் வந்த போது விசாரமும் கொள்ளாதே.

—சோக்கிரட்டீஸ்.

நமது நோக்கு

உண்மை நிலையை உலகம் அறியட்டும்

இன்று குடாநாடு முழுவதும் கதவடைப்பும், பகிஷ்கரிப்பும் நடத்தப்படுகின்றன.

கடந்த 30ந் திகதி யாழ். மத்திய கல்லூரி மாணவர் தலைவர் பொன்னம்பலம் விபுலானந்தன் என்பவரின் அகால மரணத்துக்கு காரணமாக இருந்த கோட்டை ராணுவத்தின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும். இம்மாதிரி துப்பாக்கிப் பிரயோகங்கள் இனிமேலும் தொடரலாகாதென வற்புறுத்தியும் இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

மாணவர் தலைவர் விபுலானந்தன் இறக்க வேண்டியேற்பட்ட சூழ்நிலை மிகவும் துர்ப்பாக்கியமானது.

கோட்டை முகாம் பகுதியில் துப்பாக்கிப்பிரயோகம் நிகழும் வேளைகளில் முகாமுக்கு அருகில் நேர் நிலையில் அமைந்துள்ள மத்திய கல்லூரி மாணவர்கள் பரபரப்புக்குள்ளாவதில் ஆச்சரியமில்லை. கலவரமடைந்த மாணவர்களை அமைதிப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தவேளையில் மாணவ தலைவனின் முதுகில் குண்டடிபட்டதும் அவர் தனது அன்னையை நினைத்து 'அம்மா' என அழைத்தபடி துடிதுடித்துவீழ்ந்தார்.

இது ஒரு தனிப்பட்ட மாணவனுக்கு ஏற்பட்ட நிலையென்று கருத முடியாது. இப்பிரதேசத்திலுள்ள எந்த ஒரு மாணவனுக்கும் இந்நிலை ஏற்படலாம் என்பதாலேயே இன்று மாணவ சமுதாயம் ஆக்ரோஷத்தோடு பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இன்றைய மாணவர்களே நாளைய பொறுப்புமிக்க (குடிமக்கள்) தலைவர்கள் என்று கூறப்படுவதுண்டு. அதேசமயம் பதவியிலிருக்கும் அரசாங்கங்கள் எடுக்கும் தூரப் பார்வையற்ற நடவடிக்கைகளால் விரக்திக்கும் வெறுப்புணர்ச்சிக்கும் இவர்கள் ஆளாகி விடுகிறார்கள். இதன் விளைவாக பொறுப்பற்ற அரச படைக்கெதிரான போராளிகளாகவும் அவர்கள் மாறிவிடுகிறார்கள்.

திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் அமுல்படுத்த ஆரம்பித்த பல்கலைக்கழக நுழைவு தொடர்பான தரப்படுத்தல் காரணமாக இப்பிரதேசத்தில் தமிழ் மாணவர்கள் கொதித்தெழுந்தார்கள். குடாநாடு முழுவதும் போராட்டங்களை நடத்தினார்கள் அந்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் இன்று தமிழீழவிடுதலை இயக்கங்களில் போராளிகளாக ஆயுதம் தரித்து நிற்கிறார்கள் என்பதை யார் மறுக்கமுடியும்?

இன்றைய போராட்ட சூழ்நிலையிலும்கூட அரசும், அதன் பணிப்பின் மீது செயல்படும் ராணுவமும் சற்று நிதானமாக நடந்து கொள்ளமுடியும்

இந்தப் பகுதியில் மிக முக்கிய கல்லூரிகள் கோட்டைக்கு அருகிலேயே இருக்கின்றன. இவை மட்டுமல்ல, பொதுமக்கள்கூடும் நீதிமன்றங்கள், சந்தைகள், போதனா ஆஸ்பத்திரி முதலியனவும் இங்கேயே உள்ளன இந்நிலையில் போர் நடவடிக்கைகளில் போராளிகள் நிதானம் இழப்பார்களென்று சொல்லமுடியாது. ஏனெனில் அவர்கள் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காகவே போர்க்கொடி உயர்த்தியிருப்பவர்கள் ஆனால், ராணுவத்தை அவ்வாறு கூறமுடியாது அவர்களின் கடந்தகால செயற்பாடுகளும் இதனை உறுதிப்படுத்தாது துப்பாக்கிப் பிரயோகத்தில் எவர் செத்தாலும் அவர் தமிழர் என்பதால் போராளி என்றே கணிக்கப்படுகிறார்.

ராணுவ துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமாகும் ஒருவர் சாதாரண பொதுமகனா, போராளியா என்பதை கொழும்பிலிருப்பவர்களே தீர்மானிக்கும் நிலை இருந்துவருகின்றது.

இந்த நிலையில், கோட்டையில் ராணுவமுகாம் இருப்பதை இப்பிரதேசமக்கள் சற்றும் விரும்பவில்லை. அதனை வேறு இடத்துக்கு மாற்றும்படி தொடர்ந்தும் அவர்கள் போராடிவருகிறார்கள்.

எனவே இந்தப்போராட்டத்தின் இன்னொருபடியாக இன்றைய பகிஷ்கரிப்பும் கதவடைப்பும் அமைகிறது எனலாம். இங்குள்ள உண்மை நிலையை தென்னிலங்கை மக்களும், உலக நாடுகளும் புரிந்துகொள்ள இது உதவும் என்று நம்புவோம்.

கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாகுமா?

மாணவர்கள் மத்தியில் 'விபுல்' ஓர் ஒளிமுத்து

மாணவனாக இருந்து கொண்டே மாணவர்கட்குச் சேவை செய்யும் வாய்ப்பு ஒரு சிலருக்கே வாய்க்கும் அந்த முத்தான மாணவர்களில் ஒரு ஒளிமுத்து சமீபத்தில் அகால மரணமடைந்த மாணவமணி பொ.விபுலானந்தன் கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? 17 வயதினிலே அகால மரணத்தையடைந்த விபுலானந்தன் பன்னெடுங்காலம் தமிழ் மக்கள் இதயத்திலே வாழ்வார் என்பதில் சந்தேகமேயில்லை.

விபுலானந்தன் ஒரு மாணவன் மாத்திரம் அல்ல, அவர் ஒரு மாணவர் தலைவன் கோட்டை இராணுவ முகாமிலிருந்து சரமாரியாகக் கிழக்கு நோக்கிச் சுடப்பட்ட துப்பாக்கி வேட்டுக்களால் மாணவர்கள் கலக்கமடைகின்றனர். பலர் அழுதும் விடுகின்றனர். அந்த மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 'விபுல்' மேல் மாடிக்கு ஏறுகின்றான் அனைவருக்கும் உரிய பாதுகாப்பினைச் சரிப்படுத்தி வெற்றிக் கொடி நாட்டிய நேரம் கோழைகள் விட்ட அம்பு போல விபுலனின் முதுகினைச் சன்னம் ஒன்று பதம் பார்த்தது, விபுலனின் முதுகிலே பட்ட சன்னத்தினால் இரத்தம் ஆறாக ஓடியது. அது கண்டு ஆற்றாது மாணவர் கண்ணீர் அங்கு ஆறென ஓடியது. மாணவர்களை ஆற்ற வேண்டிய ஆசிரியர்களும் ஆற்றாமை கண்டு அழுதனர் என்றால் இந்த மாணவ தலைவன் விபுலனுக்குத் தான்!

ஓடுகின்ற விமானத்தில் கோளாறு ஏற்பட்டால் பிரயாணிகள் முதலில் பரசூட்டில் குதிப்பர் அதன் பின்பு பணிப்பெண்கள் கடைசியில் தான் விமானமோட்டி! விபுலனின் மாணவ பணியை எடைபோட்டுப் பார்த்தால்மாணவ தொண்டின் மகத்தான பணியை அவர் செய்து முடித்துவிட்டார் என்பதேஉண்மை. விபுலன் மறைவால் தமிழ் மக்கள் ஒரு கலைமாமணியை இழந்துவிட்டார்கள் விபுல் சிறந்த கறோல் பாடகன், மிருதங்கத்தில் சிறந்த விற்பன்னன், நோத் ஸ்ரார் [North Star] இசைக் குழுவில் பிரதான அங்கத்தவன்! 17 வயதிற்குள் 30 சிறந்த இசை நிகழ்ச்சிகளைத் தமிழ் மக்களுக்கு முன்புவைத்துப் பாராட்டுக்கள் பல வாங்கிக் கொண்டவர் அதுமாத்திரமின்றி மாவட்ட ரீதியிலான இசைப் போட்டியில் திருகோணமலையில் கலந்து கொண்டு அப்பரிசினைத் தட்டிக் கொண்ட பெருமையும் விபுலனையே அடைந்தது.

ரி. சிவகணேசன்

விபுலா உனது மறைவு இசைஉலகிற்கு முகாரிராகம் விண்ணுலகில் உறங்கும் விபுலனே உம்ஆத்மா நிம்மதியில் உறங்கிட நாம் இசைத்திடுவோம் நீலாம்பரி!

அம்புலன்ஸ் சேவையில்

துன்பப்பட்டோர் துயர் துடைப்பதில் விபுலன் காட்டிய முன்மாதிரி யாவரும் மனம் கொள்ளத்தக்கது. சென் ஜோன் அம்புலன்ஸ் சேவையின் சிரேட்ட அங்கத்தவனான விபுல் யாழ் மக்களுக்குச் செய்த துணிகர சேவைகள் இளையதலைமுறையினர்க்கு முன் உதாரணமாகும்!

விபுல் ஒரு விளையாட்டு வீரன். அந்த வகையில் யாழ். மத்திய கல்லூரி விபுலனால் புகழடைந்தது! பதினேழு வயதுக்கு உட்பட்டவர்களின் கூடைப் பந்தாட்டப்போட்டியில் கடந்த வருடம் கப்டனாக விளங்கினார்.

லியோ உறுப்பினன்

லியோ கழகத்தில் 83ம் ஆண்டிலிருந்து 86ம் ஆண்டு வரை அவர் கடமையாற்றினார் சென்ற வருடம் யூலையில் இருந்து 86 யூலை வரை இக்கழகத்தின் பொருளாளராக இருந்தார் கடந்த இரண்டாம் திகதி தனது செயலாளர் பதவியைப் பதவிப் பிரமாணம் செய்ய இருந்தார். அதற்கு முன்பே காலன் விபுலனைக் கவர்ந்து விட்டான்! கலா நீ கொடியவனே

[5-ம் பக்கம் பார்க்க]

சூரசங்காரம்

ஆயிரத் தெட்டண்டங்களிலும் இருந்த சூரபன்மனுடைய அவுணப்படைகள் எல்லாம் முருகப் பெருமானால் அழிக்கப்பட்டன. சூரபன்மனும் முருகப் பெருமானுடன் யுத்தம் புரிந்து கனைப்புற்றான் இந் நிலையிலும் தன் தோல்வியையும் முருகப்பெருமானின் ஆற்றலையும், முதன்மையையும் ஒப்புக்கொள்ள சூரனால் முடியவில்லை. தன் திறமையால் யுத்தத்தில் இறந்தவர்களை உயிர்ப்பித்தால் தோல்வி வெற்றியாக மாறும் என்று எண்ணினான். தாயான மாயையின் அறிவுரையைப்புறக்கணித்து அவளின் ஆலோசனையின் பேரில் அமிர்தமலையைத் தன் தேரின் உதவியால் எடுப்பித்தான். அதனால் இறந்தவர் உயிர்த்தனர். அப்படி உயிர் பெற்றவரையெல்லாம் ஒரு கணப் பொழுதினுள்ளாகவே சிவப்படைக்கலத்தால் முருகப் பெருமான் சங்கரித்தார் சூரன் தனித்தான். இந்நிலையில் இனி இறந்த தன்பக்கத்தாரை உயிர்பிக்க இயலாது என்று கண்டான். ஆனால் தன் சேனைகளை இழக்காமல் இருந்த முருகப்பெருமானைப் பார்க்கப் பார்க்க சூரபன்மன் பொறாமை வடிவமானான். முருகப் பெருமானையும் யுத்தகளத்தில் தன்னைப்போல் தனிக்கப்பிடிக்க வேண்டும் என்றே சூரபன்மனின் பொறாமை உள்ளம் எண்ணியது. தன் ஏவலின்படி அமிர்தமலையை எடுத்து வந்த மகிமை வாய்ந்த தன் தேரின் உதவியாலேயே வீரவாகு முதலிய வீரர் அனைவரையும் மயக்க முறச்செய்து அப்புறப்படுத்தினான்.

சூரபன்மன் தன்னோடு எதிர்காது செய்யும் அற்பபுத்திக்குத்தக்க பதிலடி கொடுக்கும் வகையில் முருகப்பெருமான் தன் அம்பு ஒன்றை அனுப்பியே வீரவாகு முதலியோரே மீட்டது மட்டுமன்றிச் சூரபனுமனுக்கு பெரும் துணையாய் இருந்ததும், சிவபெருமான் சூரபன்மனுக்கு வழங்கப்பட்டதேரையும் தன்பக்கத்திலேயேதடுத்தார் இத்தகை முருகப்பெருமானின் செயல் சூரனுக்கு கோபத்தையூட்டியது

முருகப் பெருமானுடன் யுத்தம் செய்யாமலே தன் ஆத்திரத்தை வெளிப்படுத்தவோ, தன் ஆற்றலைப் பெருக்கவோ முயன்ற செயல்களெல்லாம் வீணாகப்போக முருகப்பெருமானை எதிர்ப்பது தவிர வேறு எதுவும் செய்ய முடியாத நிலைக்கு சூரன் நிர்ப்பந்திக்கப்பட்டான். சூரன் முருகப்பெருமானையே தொடர்ந்து எதிர்காது சிந்தித்த சிந்தனையும செய்த செயற்பாடுகளும் ஆகியன வஞ்சனையும் சூழ்ச்சியும் மிகுந்த ஆணவக்காரர்களின் இயல்புகளால் இருப்பதை நன்கு கவனிக்கலாம்

''அண்ட மதடைந்த தேர்
ஐயன் வரனியால்
மண்டலம் இழிந்து
தன் மருங்கு வருதலும்
எண்டரு பூதரும்
யாரும் மீண்டதும்
கண்டனன் அவுணர்கோன்
கனலிற் சீறினான்''

—அருளாளன்.

காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் மணிவாசகர் மணிமண்டபம்

தொன்று தொட்டு சைவ மரபிலும் இலக்கிய ரீதியிலும் பாரிய கலாசார பெருமைகளுக்கு நிலைக்களனாக விளங்கிவந்த சிற்சில கிராமங்களுள் காரைநகரும் ஒன்றாகும். சைவன் ஒருவன் இறைபற்றிச் சிந்திக்கையில் சிதம்பரத்தினை மனதில்கொள்ளாதிருக்கமாட்டான்.

அதற்கிணையாக ஈழத்திலே ஒரு சிதம்பரம் என்றால் அது காரைநகரின் சுந்தரேஸ்வரர் பெருமானின் தேவஸ்தானமாகும். சைவதிருமுறைகளிலும் காலத்தால் சிறந்ததும் ஞாலத்தால் போற்றப்படுவதுமான திருவாசகம் படைத்த மண்வாசகனை சிவனுடன் இணைந்து பேசுவதும் மார்க்கத்துள் சிறந்த மயர்க்கமாகும்.

இந்த ரீதியில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தினை நெருங்கி மணிவாசகர் மணிமண்டபம் தோன்றியது, காலத்தின் வரப்பிரசாதம் மட்டுமல்ல காரைநகர் சைவ மக்கள் அனைவரும் செய்த தவப்பயனாகும்

மணிவாசகர் சபை நடாத்தும் மணிவாசகர் விழாவும் சமய விரிவுரைகள் குருபூசை

(7ம் பக்கம் பார்க்க)

நீர்வேலிச் கந்தசாமி தேவஸ்தானம்

கந்தசஷ்டி 4 ஆம் திருவிழா

நஞ்சம் அமுதாயுண்ட நல்லசிவன் அருமைந்தா!
தஞ்சமென நினையடைந்தோம் தண்ணளி நீ செய்வாயே
அஞ்சவரு காரியங்கள் அகற்றியெமை ஆண்டருள் வாய்
நெஞ்சமுமக் கிடம்வைத்தோம் நின்மலனே அருள் புரிவாய்.

நீர்வையூர் "முருகு"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடைசி நேர வரி விளம்பரம்

யாருடையது

சங்கரத்தை உப தபாலகத்துக்குப் பக்கத்தில் வீதியோரத்தில் கண்டெடுக்கப்பட்ட பணப்பை கோண்டாவில் கிராம நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் கோண்டாவில் மேற்கு கிராம சேவகர் அலுவலகத்துக்கு அருகாமையில் உள்ளது பணத்தைத் தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் பெற்றுக்கொள்ளலாம். C 5588

தவறிவிட்டது

இராமலிங்கம் சிவபாலன் 8ம் வட்டாரம், புங்குடுதீவு என்பவருடைய அடையாள அட்டை 31-10 86 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்கு பிரயாணம் செய்த பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சண்முகாரேட்ஸ் சென்ரர், கே. கே. எஸ். ரோட் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். C 5581

வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
Nut Cracker
Strictly for Adults only
[Colour]

ஸ்பெயின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு ஜே ரஜா எனும் இந்நபர் வியாபார விஷயமாக ஸ்பெயினுக்கு வந்த சிறிது நேரத்திலேயே இவ்வாறு தவறுதலாகச் சுடப்பட்டுள்ளார் திரு ராஜா 'பிரிட்டிஷ் ஆட்டோமோபைல் சங்கத்தில்' ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தராவார்

இவரது மரணம்பற்றிய விபரங்களை ஸ்பெயின் அதிகாரிகளிடமிருந்து பிரிட்டிஷ் தூதராலய அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர். [ஊ]

நன்றி நவிலல்

செல்வன் பொ. விபுலானந்தன்

கடந்த வியாழக்கிழமை (30-10-86 யாழ் மத்திய கல்லூரியில் பாடசாலை வேளையின் போது அகால மரணமடைந்த எமது நீங்கா அன்புக்குரிய அமரர் செல்வன் பொ. விபுலானந்தனின் (மாணவ முதல்வன்) இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றி அனுதாபந் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ் மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், சக மாணவமுதல்வர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட ஏனைய கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட மாலைகள், மலர்வளையங்கள் வைத்து அனுதாபந் தெரிவித்தோருக்கும், பொதுஸ்தாபனங்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம், விபுலானந்தன் மறைவால் துயருறும் தாய், தந்தை, ஏக சகோதரி, சகோதரர்கள். A 3060

எமது புதிய வெளியீடுகள்

A. V. Mமின்

(1) தழுவாத கைகள்
விஜயகாந், அம்பிகா [Original]

(2) லட்சுமி வந்தாச்சு
சிவாஜி, பத்மினி, ரேவதி

(3) மாவீரன்
ரஜனிகாந்த், அம்பிகா

(4) பாலைவன ரோஜாக்கள்
பிரபு, நளினி, சத்தியராஜ்

சயந்தா வீடியோ சென்ரர்,

கே. கே எஸ். ரோட், கோண்டாவில்.
(C-5589)

எமது இன்றைய புதிய வெளியீடுகள்

ரஜனி, அம்பிகா நடித்த

(1) மாவீரன்
விஜயகாந்த், அம்பிகா, செந்தில் நடித்த

(2) தழுவாத கைகள்
[Original]
சிவாஜி, பத்மினி, ரேவதி நடித்த

(3) லட்சுமி வந்தாச்சு
சத்தியராஜ், பிரபு, லட்சுமி நடித்த
கலைஞரின்

(4) பாலைவன ரோஜாக்கள்

வீடியோ பிரசாத்,

இல: 424, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(A-3062)

ஷெல் தாக்கிய. . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயோதிபருடன் உரையாடினார்கள். அவர் காலியைச் சேர்ந்தவர். பெயர் மாதுங்கா. முன்பு யாழ் நகரில் வசித்தவர். தற்போது கொழும்பு ஆஸ்பத்திரியிலிருந்து இங்கு சிகிச்சைக்காக வந்திருந்தார்.

யாழ்ப்பாணம்மீது விசுவாசம்

உங்கள் சொந்த ஊர் எது? என்று வைத்திய சங்கச் செயலாளர் கேட்டபோது, 'காலி' என்றார்.

'காலியில் ஆஸ்பத்திரி இருக்கும்போது இங்கு ஏன் வந்தீர்கள்?' என்று அவர் கேட்டபோது, 'யாழ்ப்பாணம் மீது எனக்கு விசுவாசம் உள்ளது' என்றார். கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை சரியில்லாததினால் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் கூறினார்.

வைத்திய சங்க உறுப்பினர் டாக்டர் பியரிசி அவரைப் பார்த்து, 'இங்கிருக்கப் பயமில்லையா?' என்று கேட்டபோது, 'எவ்வித பயமுமில்லை' என்றார் முன்பு டாக்டர் பெஞ்சமின் தனக்குச் சத்திர சிகிச்சைசெய்ததாகவும் கூறினார்.

முன்புதான் நாகவிகாரைக்குச் சமீபத்தில் இருந்ததாகவும், தமிழர்கள் தனக்குப் பெரும் உதவிகள் செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் பெயரை அக்குழுவினர் கேட்டபோது, மாதுங்கா எனக் கூறிய அவர், தனது இடது கையைக் காட்டினார் அதில் சிங்களத்தில் 'சாகப்போவது மெய்' எனப் பச்சை குத்தப்பட்டிருந்தது.

பின்பு அங்கு மன்னாரைச் சேர்ந்த ஒரு சிங்களப்பெண்ணை சந்தித்தனர் அவரின் பெயர் மேரி சீலாவதி கையில் காயம் ஏற்பட்டிருந்தது.

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றபின் இங்கு வந்ததாகக் கூறினார்.

யார் சுட்டது என்றுகேட்டபோது இராணுவம் சுட்டதாக சிங்களத்தில் கூறினார்.

'ஹெலிக்கொப்டரிலிருந்து சுட்டார்களா' என்று குழுவினர் கேட்டபோது இல்லை துவக்கினால் சுட்டதாகக் கூறினார் கவசவாகனத்தில் வந்து திடீரெனச் சுட்டதாகவும், தனக்கு கையில் காயமேற்பட்டதாகவும் கூறினார்.

இக்குழுவினர் இராணுவத்தின் ஷெல்லினால் பலத்தசேதமடைந்து மூடப்பட்டுள்ள 33ம் கிளினிக் கட்டடத்தை பார்வையிட்டனர். பின் அங்கிருந்து பெண்கள் வாட்டிற்கு சென்றனர்

ஆஸ்பத்திரி வளவில் மருத்துவ மாணவர்கள் சுலோக அட்டைகளுடன் வெளியில் நின்றனர் தமிழிலிலும் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இச்சுலோக அட்டைகள் எழுதப்பட்டிருந்தன.

குழுவினர் அங்கிருந்து சிறுவர்வாட்டிற்குச்சென்று ஷெல்லினால் சேதமடைந்த பகுதியை பார்வையிட்டனர் அதன்பின்னர் 18ம் 20ம் வாட்டுகளுக்கு சென்றுஹெலியின் தாக்குதலினால் சேதமடைந்த கூரைகளையும், சுவர்களையும் பார்வையிட்டனர் பின் அங்கிருந்து 25ம் வாட்டிற்கு சென்று ஹெலி, ஷெல் தாக்குதலினால் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களையும் பார்வையிட்டனர்.

ஆஸ்பத்திரி நிர்வாகப்பிரிவு கட்டடத்தின் மேல் மாடிக்குச் சென்று அங்கு சேதமடைந்த இடங்களையும், டாக்டர்கள் விடுதியில் சேதமடைந்த இடங்களையும் பார்வையிட்டனர்.

டாக்டர் விடுதி அறைக்குளிருந்த 'ஷெல்' பாகம் ஒன்றை வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர் அல்விஸ்டம் ஒப்படைக்கப்பட்டது

இதன் பின்னர் வைத்திய அதிகாரிகள் சங்க யாழ் கிளைக் கூட்டத்தில் அக்குழுவினர் பங்கு பற்றினார்கள். கிளைக்குழு உறுப்பினர் அங்கு ஆஸ்பத்திரி வளவிலிருந்து எவ்வித தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லையென சத்தியக்கடதாசிகளை குழுவிடம் கையளித்தனர். [இ]

30-ம் நாள் நினைவஞ்சலி வீட்டுக்கிரியை அழைப்பு

அமரர்
வே. ஸ்ரீஸ்கந்தா
(வீரகேசரி யாழ் கிளை முகாமையாளர்)

தோற்றம்: 17-07-1946
மறைவு: 07-10-1986
வீட்டுக் கிரியை: 06-11-1986

சென்ற 7-10 86 செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்டும் வரமுடியாத காரணத்தால் அனுதாபக் கடிதங்களும் தந்திகளும் அனுப்பியும் எம்முடன் துக்கத்தில் கலந்து கொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியை தெரியப் படுத்துவதுடன், எதிர்வரும் 6-11-86 வியாழக்கிழமை வீட்டுக்கிரியை பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் இக்கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் இத்தால் அன்புடன் அழைக்கின்றோம்

திருமதி
சி. ஸ்ரீஸ்கந்தா
குடும்பத்தினர்.

பெரிய மதவடி
சுன்னாகம். C 5586

கல்லெல்லாம்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விபுல் மாணவர்கள் மத்தியில் தோன்றினால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மாத்திரம் அன்றி இடையிடையே வானில் தோன்றும் மின்னல் போல் நகைச்சுவைகள் தோன்றி மறையும் அந்தக்கீற்று இன்று மாணவர் மத்தியிலே இல்லை]

யாழ் சென்றல் கல்லூரியில் பதினொரு வருடங்கள் கல்வி பயின்ற விபுல் இடையிலே பிரிந்து சென்றமை இந்த மண்ணிற்கு மாபெரும் இழப்பு என்பதில் ஐயமில்லை. அவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட சகல சாடசாலை மாணவர்களும் தாமாக முன்வந்து செய்த ஒத்துழைப்பும், வெளியிட்ட கண்ணீர் அஞ்சலிகளும் மாணவர் சமுதாயத்தில் அவருக்கு இருந்த மதிப்பைக் காட்டுகின்றது.

வரலாற்று நாயகன் ஹோமர் கிறீசில் இறந்த போது பெரும் கூட்டம் அவருக்கு அஞ்சலி செலுத்த வந்தது அவர்களில் ஒருவன் சொன்னான் ஹோமர் இறக்கவில்லை; அவர் நீள் துயிலில் இருப்பது போன்று படுத்திருக்கின்றார்.''

ஆம்...விபுலன் தமிழ் மக்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்று இருக்கின்றார் விபுலன் இறந்து விடவில்லை! மாணவர் மத்தியிலும் அவர் நீள் துயிலில் இருக்கின்றார்.

மட்டு. நகரில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவதரப்பில் 4 பேர் கொல்லப்பட்டனர் [4 பேர் காயமடைந்தனர் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி அறிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து ஈபிஆர் எல் எவ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''மட்டுநகர் இபோச பண்டிப்போவுக்கு அருகாமையில் கடந்த 31ம் திகதி பிற்பகல் சென்று கொண்டிருந்த இஸ்ரேல் தயாரிப்பு கவசவாகன தொடர்வண்டிமீது மக்கள்விடுதலைப்படை ''கோண்சார்ஜ்'' வெடிக்கச்செய்து உக்கிரமாக தாக்குதல் நடத்தினர்.

அடுத்தநாள் 1ம் திகதி பிற்பகல் கரடியனாறு முகாமிலிருந்து உன்னிச்சை நோக்கி எமது மக்களை அழிக்கும் நோக்குடன் வந்து கொண்டிருந்த இராணுவத் தொடர்வண்டிமீது ''கோன்சார்ஜ்'' தாக்குதல் மேற்கொண்டபோது ஒரு ஜீப் முற்றாக சேதப்படுத்தப்பட்டது. இதில் சென்ற அனைத்து இராணுவமும் கொல்லப்பட்டனர். மேலும் இன்னுமோர் 'ட்ரக்' பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டது. தொடர்ந்து இராணுவத்தினருடன் எமது தோழர்கள் நேரடிச்சமரில் ஈடுபட்டனர். இத்தாக்குதலில் 5 இராணுவத்தினர் ஸ்தலத்திலே மாண்டனர் 13ற்கும்மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலுக்குஉதவியாக கரடியனாறு முகாமிலிருந்து 100ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்துஅருகிலுள்ள கட்டடம் ஒன்றினுள் நுழைந்து மினிமுகாம் இட்டனர். இவ்மினிமுகாம்மீதுபிற்பகல் 7-30 மணியளவில் எமது மக்கள் விடுதலைப்படை வீரர்கள் உக்கிரமாகத் தாக்கினர். இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமுற்றனர்.

மட்டுநகர் கொக்கட்டிச் சோலையில் அமைக்கப்பட்ட இராணுவ மினிமுகாம்மீது எமது மக்கள் விடுதலைப்படையினால் கடந்த 2 ம்திகதிஇரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். எமதுதரப்பில் எவ்வித இழப்புக்களும் இல்லை. [மா]

யாழ்ப்பாண அக்கடமி.

க.பொ.த. உயர்தர பரீட்சை – ஆகஸ்ட், 1987.

மீட்டல் வகுப்புகள்

87-ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 17-11-86ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

3-6. பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22617.

அதிபர்.
[A-3058]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். குடாநாட்டு "குளங்கள் பராமரிக்க நீர்த்தேக்கங்களை திட்டம்வேண்டும்"

யாழ்ப்பாணம், புதன் "யாழ். குடா நாட்டினுள் அமையப் பெற்ற சகல குளங்களையும் நில நீர் தேக்கம் வடிகால் அமைப்புகள் போன்ற சகல அம்சங்களை உள்ளடக்கிய பிரதேசத்திற்கு நீண்ட காலம், நன்மையளக்கக் கூடியதான ஒரு கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டு பின்னர் நிதிவசதிக்கேற்ப பகுதி குதியாக செயல்முறைப்படுத்துவதற்கேற்ற வகையில் நீண்ட காலத்திட்டம் வகுக்க வேண்டும்."

அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற யாழ் குடாநாட்டு குளங்களை ஆழமாக்குதல் வண்டலகற்றுதல் சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலின் பின் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

கலந்துரையாடலில் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் மேலதிக அரசாங்க அதிபர், சம்பந்தப்பட்ட செயலக அதிகாரிகள் நீர்ப்பாச்சன சமநலசேவை நீர்வள அதிகாரிகளும், "ஊற்று", "றெடோ" நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

குளப்புனரமைப்புக் கொள்கை வகுத்தலுக்கும், நீண்டகாலத்திட்டமொன்றை உருவாக்குவதற்கும் அரசாங்க அதிபரால் நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இக்குழுவில் சமநலச்சேவை உதவி ஆணையாளர், திரு.கே. பரமலிங்கம், யாழ். மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர், நீர்வளச்சபை பொறியியலாளர் "றெடோ" நிறுவன பொறியியலாளர் திரு.த குணசேகரம், "ஊற்று" நிறுவன பொறியியலாளர் கள். திருவாளர்கள், சி. நடராசா, விக்னேஸ்வரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்

ஏற்கனவே அனுமதி பெற்று ஆழமாக்கும் வேலையில் உள்ள "பிளக்கன்" குளம் தவிர்ந்த ஏனைய குளங்களாவும், ஆழமாக்கல் போன்ற வேலைகளில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளன.

இவ்வருட இறுதிக்குள் 15,000 பல்.கழகமாணவர்கள் மகாபொல பரிசுபெறுவர்

கொழும்பு, செவ் "மகாபொல புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் சுமார் 15 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வருட இறுதிக்குள் பயனடைவார்கள்" என்று வர்த்தகக் கப்பல்துறை பிரதி அமைச்சர் மகேந்திர விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

129-வது மகாபொல பெருஞ் சந்தையை வெள்ளவாயா மகாவித்தியாலயத்தில் தொடக்கி வைத்துப் பேசும்போதே மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், 10 149 பல்கலைக்கழக மாணவர்கள் மகாபொல புலமைப் பரிசில் பெற்றுள்ளனர் என தெரிவித்தார். [வா]

திறப்புவிழா

யாழ்ப்பாணம், புகையிரதநிலைய வீதி காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் சபை மணிவாசகர் மணிமண்டபம் திறப்பு விழாவும், 46ம் ஆண்டுப் பொதுக்கூட்டமும் இன்று புதன்கிழமை பிற்பகல் மேற்படி கோவிலில் நடைபெறவுள்ளன.

மணிவாசகர் சபைத் தலைவர் திரு செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஈழத்து சமயப் பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வார்கள்.

இன்றைய பலன்

மாதம்: ஐப்பசி
திகதி- 19 (05-11-1986)
கிழமை- புதன்
திதி சதுர்த்தி பி இ வரை
நட்சத்திரம்- கேட்டை
பி. ப. வரை

மேடம்- வாசன விருத்தியுண்டு. இல்லறத்தில் திருப்தி காணும். மேலான வாழ்வு கிட்டும். தொழில் முன்னேற்றம் உண்டு. முதியவர் ஆசியுமுண்டு.

இடபம்- தெளிந்த மனம் தேடியது கிடைக்கும் தேனான வாழ்வும் கிட்டும் சுபதினம்

மிதுனம்- நிதியில் முடக்கம் ஏற்படும். ஆயுதங்களுடன் முகுவதில் அவதானம் வேண்டும். குடும்பத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

கடகம்- பரோபகாரச் சிந்தை மேலிடும். வீட்டில் சுமுகமான நிலை தோன்றும். குருவின் ஆசியுடன் தொழிலும் சிறக்கும்.

சிங்கம்- வாழ்வுப்பாதை வளமாக அமையும். பந்தத்தின் கொண்டாட்டமுண்டு. தொழில் மகிழ்ச்சியுண்டு.

கன்னி- பிறபொருள் வரவு முண்டு பிள்ளைகளின் பெருமையுண்டு. கொடுவனவு செய்ய உகந்த தினம்.

துலாம்- அதிக ஆசை ஆபத்தைத் தேடித்தரும். தொழில் தரையிலும் தொல்லைகள் தோன்றும். நம்பிக்கை மோசடியும் நடக்கும்.

விருச்சிகம்- எதிலும் மனவிரக்தி தோன்றும். குடும்பத்திலும் பூசல்கள் தோன்றலாம். நாவடக்கம் விரும்பத்தக்கது.

தனுசு- இதயத்தில் அமைதி நிலவும். இதமான வாழ்வும் கிட்டும். தொழில் நிலைமையும் சீர்பெறும்.

மகரம்- தொழில் நஷ்டமுண்டு. இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். எவ்விடயத்திலும் விழிப்புடன் இருக்கவும்.

கும்பம்- மாதுரு வழியால் மகிழ்ச்சிகரமான செய்தி கிட்டும். தனகாணிய விருத்தியுமுண்டு. பூமி லாபமுண்டு.

மீனம்- வேண்டியளவிற்கு வெள்ளிப்பணம் துள்ளும். தேடிய பொருள் இன்றுகாலடியில் வந்து சேரும்.

திருமலை
வே. ரவீந்திரன்

VACANCY
ASST. LECTURER
in "Electronics and Communication"

Candidate should have a Degree or equivalent recognised qualification and adequate practical experience to teach technician students at Diploma level.

Salary: Above Rs. 1,500/- p. m.

Apply with full bio-data to the Director, before 15-th November, 1986.

DIRECTOR,
Jaffna College Technical Institute.

(A-3048)

அறிவித்தல்

யாழ். கன்னாதிட்டி வீதியில் உள்ள 124, 126 இலக்கம் கொண்ட கடைகளும் அதைச்சார்ந்த பிறபகுதிகளும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்துக்கு உரிமையானவை இந்த ஸ்தாபனங்களை தேவஸ்தானத்தின் அனுமதியின்றி வேறு எவரும் கைவேறுபடுதோ அல்லது குடியிருப்பதோ சட்ட விரோதமானதென்பதை அறியத்தருகின்றேன்.

ந. செல்லப்பா,
அறங்காவலர்,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
[C-5560]

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் நேரடியாக உடனுக்குடன்உங்களை அழைத்துச் செல்வார்.

சவூதியில்:

1. AIRLINE ACCOUNTANTS
2. SALES PROMOTOR
3. TICKET and RESERVATION AGENT.
4. TRAFFIC OFFICER

(With ACCOMODATION and OTHER BENEFITS)

கிளீனர்ஸ், Drivers மேசன், காப்பெண்டர், Gardener, Labourer (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்)

இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

குவைத்: Labourer, கிளீனர்ஸ், Drivers (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்) இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

எமது காரியாலயத்தில் பாஸ்போட் 10 படங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும் இவை சைவசம் உடன் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம். நன்றி

GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (A 2838

பவர்ஸ்
வீட்டுத் தோட்ட உரவகைகள்

தேவையான விசேட உரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல. 3. பழ மரங்கள்
இல. 4. இச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்தரை
இல. 12. ரோசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – "விசேடம்"
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

MASTERS ABC 2/83

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

(A-1363)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாண ஒழுங்குகள்

குவைத் - சுப்பர் மார்க்கட் ஓயில் கம்பெனி

குவைத் }
சிங்கப்பூர் } பணிப் பெண்கள்

அவுஸ்திரேலியா, நோர்வே

ஆகிய நாடுகளுக்கு குறைந்த கட்டணத்துடன் பயண ஒழுங்குகள்.

பாஸ்போட், விசா, பொண்ட், ரிக்கற் யாவும் துரிதகெதியில் செய்துகொடுக்கப்படும்.

ரஜீவன் ட்ரவல்ஸ்,

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

[A-2844]

பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம்மாதம் 15-ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதி Labourers ஆக செல்ல விரும்புவோர் 14-ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:

N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் வங்களாவடிச் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

★ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் குப்பிளான் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

[A-2845]

வடமாகாணப் புற்றுநோய்ச்சங்கம்

புற்றுநோய் அறிவுப் போட்டி முடிவுகள்

முதற் பரிசு: ஏ. ஜே. முஹம்மத் ஸல்மி,
யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி.

இரண்டாவது பரிசு: சந்திரவதனி பத்மநாதன்,
மெதடிஸ்ற மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

மூன்றாவது பரிசு: உமாவதி தாமோதரம்பிள்ளை,
வேம்படி மகளிர் கல்லூரி.

ஆறுதல் பரிசுகள்: சுரபி கந்தையா,
வேம்படி மகளிர் கல்லூரி.

இராஜிவி கதிரவேல்,
வேம்படி மகளிர் கல்லூரி.

யோசேப் ஜே. சாமுவேல்,
சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி.

பவானி தட்சணாமூர்த்தி,
டாக்டர் தியாகராஜா மகாவித்தியாலயம், காரைநகர்.

பாமினி பாலசுப்பிரமணியம்,
வேம்படி மகளிர் கல்லூரி.

பரிசுகள் வழங்கப்படும் இடம், திகதி ஆகியன அறிவிக்கப்படும்.

வைத்திய கலாநிதி V. கிருஷ்ணராசா,
உப-தலைவர்.

[A-3051]

மறவன்புலோ ஐக்கியநாணய சங்கம்

யாழ்ப்பாணம் புதன்

ஐக்கிய நாணய சங்கம் ஒன்று அண்மையில் மறவன்புலோவில் சி சிவசுப்பி மணிய ஐயர் தலைமையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து நடப்புவருட நிர்வாகிகள் தெரிவின்போது செயலாளராக இ.சுதமாரும், தனாதிகாரியாக க. மனோகரனும் மற்றும் க காசிப்பிள்ளை, மாணிக்கவாசகர், க.கணேசன் வ. திலகேஸ்வரன், க செல்வரத்தினம், இ சிவபாதம், நா. சிவலிங்கம் இ வன்னியசிங்கம் ஆகியோரைக் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிசெய்யப்பட்டது.

ஈழத்து ..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் போன்றனவும் வசதியாக நிகழ்த்த மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இன்று மண்டபத்திறப்பு விழா சிறப்பாக நடைபெறுவது ஈழத்து சிதம்பரத்தில் ஆடல் வல்லானையும் சுந்தரேஸ்வரரையும் ஐயனாரையும் தரிசிக்க செல்லும் ஈழம்வாழ் சைவ மக்களுக்கு இனிய செய்தியாகும்.

இம்மணிவாசகர்சபை சைவ மக்களிடையே ஆன்மீக அறிவுப்பசியை நீக்கி தெய்வீக உணர்வினை ஏற்படுத்துவதையே பிரதான நோக்கமாகக் கொண்டு கடந்த 40 வருடமாகச் செயற்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் தோறும் இச்சபை நடாத்தும் மணிவாசகர் விழாவுக்குத் தமிழகத்திலிருந்து சைவப் பேரஞர்களை அழைத்து ஈழத்து சிதம்பரத்திற்கு யாத்திரை செய்யும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் செவிக்கு விருந்தளித்து மகிழும் இச்சபையின் செயல் பலரும் போற்றியதேயாகும்.

இச்சபை கடந்த பல வருடங்களாக பாடசாலை மாணவர்களுக்கிடையே சமய பாடப்பரீட்சை நடத்தியும் மார்கழித் திருவாதிரையை ஒட்டி திருவாதிரை மலர் வெளியிட்டும் சைவ ஆதீனங்களைப் போல் பணியாற்றி வருகிறது சைவமக்கள் பலரும் அறிந்ததேயாகும். காரைநகருக்கும் திருவாசகத்துக்கும் உள்ள தொடர்பை அறிஞருலகமெல்லாம் உளம்கொள்ளும் வகையில் காரைநகர் ண்டிதமணி அருளம்பலனார் திருவாசகத்துக்கு எழுதியுள்ள விளக்கவுரை ஒன்று அறிஞர்களால் மதிக்கப்படுவதாயுள்ளது.

இவரைப் போலச் சைவமக்கள், பல்கலைக்கழகமாணவர்கள் விசாலமான அறிவைப்பெறும் வகையில் இச்சபை இம்மண்டபத்தில் ஒரு நூல் நிலையத்தை அமைக்க எண்ணியுள்ளதானது மணிமண்டபத்திறப்பு விழாச் சமயத்தில் சைவமக்களுக்கு இனிக்கும் செய்தியாகும்.

ஏற்னவே இச்சபையால் ஐந்நூறு புத்தகங்கள் சேகரிக்கப்பபடடுள்ளதாகச் சபைத் தலைவர் தேவதாசன் தெரிவிக்கின்றார். இச்சபை முயற்சிகள் பல துறைப்பட்டுப் பெருக்கவும் வளர்ச்சியடையவும் வாய்ப்பாக ஈழத்துச் சிதம்பரம் செல்லும் அன்பர்களுக்கு இம்மணிமண்டம் ஒரு மணிவாசகராகவே விளங்கி சிவஞான அறிவினை ஊட்டும் எனத் திண்ணமாக நம்பலாம்.

பதவி வெற்றிடங்கள்

எமது போக்குவரத்துச் சபை அலுவலகத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(1) மோட்டார் வாகன பரிசோதகர்.
(2) காசாளர்கள்
(3) எழுதுவினைஞர்கள்.
(4) ஆங்கில, தமிழ் மொழி தட்டெழுத்தாளர்கள்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை விண்ணப்ப முடிவுத் திகதியான 15-11 86க்கு முன்னதாக புலிகளின் குரல் செய்திப் பலகையில் உள்ள ஆலோசனைப் பெட்டிகளில் சேர்க்கவும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

[C 5580]

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

விசேட

பொதுக்கூட்ட அறிவித்தல்

சங்கத்தின் மீளாய்வு செய்யப்பட்ட யாப்பை அங்கீகரிப்பதற்கான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சி நிரல்:
1. தேவாரம்
2. புதிய யாப்பை அங்கீகரித்தல்

ந. வித்தியாதரன்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

C 5577

வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் கவனத்திற்கு

1-11-86 தொடக்கம் காங்கேசன்துறை - மாவிட்டபுரம் ஆகிய இடங்களுக்கு தோலகட்டி தயாரிப்புகளின் மொத்த சில்லறை வியாபாரிகளாக

குமரன் ஸ்டோர்ஸ்

K K: S வீதி,
(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன முன்பாக)
காங்கேசன்துறை

என்பவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜோ. எகட்டன்,

செனித் மார்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,
யாழ்நகர்.

(A 2846]

உடனடி வெற்றிடங்கள்

(1) தையலில் நல்ல அனுபவம் உள்ள பெண்கள் உடனடியாகத் தேவை. (தகுதிவாய்ந்த சம்பளம். நேரில் கதைத்து கொடுக்கப்படும்)

(2) மேற்பார்வையாளர் (SUPERVISOR) (பெண்) உடனடியாகத் தேவை. சம்பளம் 600/-
குறிப்பு:- அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கவர்கள். (சுண்டிக்குளி)

(3) சத்திய வசன கிறிஸ்தவப் பாடல்கள், ஆங்கில கிறிஸ்தவ பாடல்கள் இங்கு விற்பனைக் உண்டு. மேற்கூறிய விளம்பரங்களுக்கு விரும்பியவர்கள் (6- 11- 86 வியாழக்கிழமை) காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நேரில்வந்து சந்திக்கவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

சபா,
இல. 20, சுவாடீஸ் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(C 5578)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 5-11-86

இம்மாத இறுதியில் பேச்சுக்கள்

சென்னை, நவ 4

இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து மேலதிக பேச்சுவார்த்தைகள் இம்மாதம் இறுதியில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

உதைபந்தாட்டம்: இன்றைய போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம், புதன்

மாணவர் முன்னணியின் சார்பில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த கொக்குவில் இந்து-செண் பற்றிக்ஸ், மகாஜனா - செண். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று நடைபெறும் துக்கதனத்தையொட்டி, நாளைக்கு பின்போடப்பட்டுள்ளது.

மேற்படிப் போட்டிகளாவும் நாளை செண். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (வி)

"கோட்டை இராணுவ முகாம் அமைக்கப்பட்டபின் மக்கள்படும் இன்னல்களை நேரில் கண்டறியவே இங்கு வந்தோம்"

டாக்டர் ஸ்ரன்மோடி அல்விஸ்

யாழ்ப்பாணம், புதன்

"யாழ். கோட்டை இராணுவ முகாம் அமைக்கப்பட்ட தற்குப் பின் மக்கள் படும் இன்னல்களை நேரில்வந்து பார்ப்பதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம். யாழ்ப்பாணம் வந்தபின் மக்கள் எமக்குத் தந்த வரவேற்பையிட்டும் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்."

இவ்வாறு நேற்று யாழ்.ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் ஸ்ரான்மோடி அல்விஸ் கூறினார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் சங்கச்செயலாளர் டாக்டர் ரத்னப்பிரியா, டாக்டர் எஸ். பியரிசி, யாழ். வைத்திய அட்சகர், மற்றும் டாக்டர்களும் கலந்துகொண்டனர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-

"யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகில் இராணுவ முகாம் இருப்பதால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் எவ்வளவுசீக்கிரம் தீரவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் தீரவேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

இங்கு நாம் வந்து பல இடங்களைப் பார்வையிட்டுப் பல அபிப்பிராயங்களைப் பெற்றிருக்கின்றோம். ஆஸ்பத்திரியையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் பகைமையற்ற பகுதியாக்குவதற்கு நாம் முயற்சி செய்வோம்".

இராணுவ முகாமிலிருந்து அடிக்கப்படும் 'ஷெல்'களால் மக்கள்படும் துன்பங்களைப் பார்வையிட்டபின் பின் செயற்படுவோம்" என்று கூறினார். (ஒன-கே)

ஹர்த்தால்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பூரண துக்கதினம் அனுஷ்டிக்குமாறு மாணவ தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் தனியார் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டும், வியாபார தொழில் நிறுவனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டுச் செயற்படுமாறும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது

மேலும் தத்தம் அலுவலகங்களுக்குச் செல்வோரும், உத்தியோகத்தர்களும் கறுப்புப் பட்டி அணிந்து செல்லுமாறும் கேட்கப்படுகின்றனர்.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் சகல பாடசாலை மாணவர்களையும் ஒன்றுகூடி அங்குநடைபெறும் ஊர்வலத்தில் பங்கு பற்றுமாறும் மாணவ தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மக்கள் வங்கி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிக் கிளையின் மீது 'ஷெல்' வீழ்ந்ததால் வங்கி திப்பிடித்துப் பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன் வங்கியோடு சம்பந்தப்பட்ட தனிநபர் வேலைத்தளங்கள், நீர்ப் புத்தகங்கள் யாவும் எரிந்து சாம்பராயின. நேற்று அதிகாலை பலத்த மழை பெய்தபோதும் நண்பகல்வரை வங்கியிலிருந்து புகை வந்த வண்ணமிருந்தது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மூன்று வர்த்தக சங்கத் தலைவரும், பிரபல வர்த்தகருமான எஸ். வி. முருகேசு கடையின் மேல்மாடிக் கூரை ஓடுகள் சிதறிய நிலையில் வெறும் சிலாகைகளாகக் காட்சி அளிக்கின்றது. கடையின் கீழ் தளத்தில் படுத்திருந்த கடைச் சிப்பந்திகள் 9 பேரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். பல லட்சக் கணக்கான உணவுப்பொருட்கள் நீரில் நனைந்து அப்புறப் படுத்தப்பட்டிருந்தது.

எஸ் வி முருகேசு கடைக் சமீபலுள்ள பிரபல சாப்பாட்டுக்கடையான வை சி கி. ஹ கடைமீது ஷெல் வீழ்ந்ததனாலும் கடை பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன் அங்கு படுத்திருந்த நால்வர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கடையில் வேலைசெய்யும் தர்மலிங்கம் (வயது 36) எம். மதன் (வயது 16) யோகானந்தன் (வயது 22) மூர்த்தி (56 வயது) ஆகிய மூவரும் நேற்று அதிகாலை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று நேற்றைய தினமே சுத்தம் வீடுகளுக்குச் சென்றனர் ஒருவர் மட்டும் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று முன்தினம் இரவு முழுவதும் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு இலக்கான யாழ்நகர் நேற்று சோபை இழந்து காணப்பட்டது. சில்கடை முழுமையாக பூட்டப்பட்டும் சில கடைகள் ஒற்றைக் கதவிலுமாக இருந்து வியாபாரம் நடத்தினர். மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

மக்கள் இணைந்து போராட வேண்டுகோள்

யாழ். மத்திய கல்லூரிமாணவர்கள் நடாத்தும் துக்கதினப் போராட்டத்துக்கு மாணவர் இளைஞர் பொதுமக்களும், ஏனை மாணவர் பொது மன்றமும் தமது ஆதரவைத் தெரிவித்து ஈழமக்களையும் இதில்இணைந்து போராடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். [மா]

யாழ். நோக்கி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பால் முன்னேற முடியாதபடி போராளிகள் காவலில் ஈடுபட்டுள்ளதினாலேயே இவர்களுடைய திட்டமிட்ட பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

இவ்அணியினைச் சேர்ந்தவர்கள் மாங்குளத்திலிருந்து கிளி நொச்சி புறப்பட்டபோது பழைய முருகண்டிஎன்றஇடத்தில் போராளிகளுடைய நிலக் கண்ணிவெடிக்கு அகப்பட்டது தெரிந்ததே [ஊ]

சட்டம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிய பின்னர் கொழும்பு திரும்பிய திரு. டிக்ஷிற் ஜனதிபதி ஜெயவர்த்தனவை நேற்றுச் சந்தித்துரையாடினர்.

மேலும் இலங்கைத் தமிழர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கும், மக்கள் கருத்துக்களிக்கும் வாக்கெடுப்பு, அரசியற் சாசனத்தை மாற்றியமைப்பது போன்ற தேவைப்படாத ஆலோசனைகள் எதையும் பரிசீலிக்கவும் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினர்.

இந்திய அரசின் ஒத்துழைப்பு அணுகுமுறையை ஜனதிபதி பாராட்டினார் இலங்கை அரசு அறிவித்துள்ள ஆலோசனைகளை இலங்கைத் தமிழ்ப் போராளிகள் முற்றுக நிராகரித்துள்ளனர் என்று கூறுவது சரியல்ல என்று திரு. டிக்ஷிற் ஜனதிபதி ஜெயவர்த்தனவிடம் தெரிவித்தார்.

இலங்கை அரசின் ஆலோசனைகள் இலங்கைத் தமிழர்களின் விருப்பதிதைமுழுமையாகத் திருப்திப்படுத்தவில்லையென்று இலங்கைத் தமிழ்ப் போராளிகளுமுக்கியஎழுத்து மூலம் தெரிவித்திரு பதாகவும், மேலும் இந்த ஆலோசனைகளை எப்படி அபிவிருத்தி செய்வதென்பது குறித்தும் தெரிவித்துள்ளதாகவும திரு. டிக்ஷிற் கூறினார்.

இந்த எழுத்து மூலமான ஆலோசனைகள் குறித்து இந்திய அரசு நன்கு ஆராய்ந்த பின் இலங்கை அதிபருடன் கலந்தாலோசிக்கும் என்றும் இது பெங்களூரில் நடைபெற விருக்கும் தெற்காசியமண்டல மாநாட்டிற்கு முன்னதாக நடைபெறக் கூடும் என்றும் திரு. டிக்ஷிற் தெரிவித்தார். [ஒ-கே]

மரண அறிவித்தல்

சின்னத்துரை ராசேந்திரம்

சங்கரத்தையைச் சேர்ந்த சின்னத்துரை இராசேந்திரம் காலமானார், அன்னார் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை, திருமதி அன்னலட்சுமி சின்னத்துரை ஆகியோரின் அருமைப் புதல்வனும், சங்கரத்தையைச் சேர்ந்த தங்கவடிவின் அன்புக் கணவரும், சுபஞ, சுலோச்சன, சுஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-11-86 புதன்கிழமை [இன்று] பிற்பகல் 4-00மணிக்கு சங்கரத்தை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

சங்கரத்தை, சி. புவனேந்திரன்
வட்டுக்கோட்டை [C 5585]

திருமதி மா. புஸ்பராணி

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தைச் சேர்ந்த மா. புஸ்பராணி (4-11-86) காலமானார் இவர் மாரிமுத்து [றியாட்] அன்புமனைவியும், ஜெயக்குமாரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணசாமியின் அன்புமகளும், கந்தசாமி [வைரமாளிகை ஊழியர்], காலம் சென்ற குணசிங்கம் [அப்பர்], வெற்றிவேலாயுதம் [சீமெந்துக் கூட்டுத்தாபனம்], பவளராணி ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் 5-11-86 புதன்கிழமை [இன்று] காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C 5591) தகவல்: கி. கந்தசாமி

திருமதி சந்தியாப்பிள்ளை பாக்கியம்

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த திருமதி சந்தியாப்பிள்ளை பாக்கியம் காலமானார். அன்னார் பிலிப் சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், இன்பராணி செல்வராசா (நோர்வே), பாக்கியராசா (நோர்வே), பிலோமினு (நோர்வே) திரேசா, பூபதி ஆகியோரின் அன்புத்தாயாரும், விக்டர் (போட் மெக்கானிக்) பாக்கியதுரை (நோர்வே) குயின்ரஸ் ஜோர்ஜ் (Hoechst (Ceylon) Co Ltd) ஜரின், செரின் ஆகியோரின் அன்புமாமியாரும், விக்னேஸ்வரி, புவனேஸ்வரி, பென்ஹர், ராஜேஸ்வரி, சாந்தினி, மொறின், சியாமளா, ரேமுஸ், மரியோ, மேரியான் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
91/3, செபஸ்தியன் ரோட், செ. விக்டர்
குருநகர். (C5592)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் வர்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number P/103/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

லோறன்சியா பாக்கியம் பாலரட்ணம்

திருமதி லோறன்சியா பாக்கியம் பாலரட்ணம் கிளி நொச்சியில் காலமாகிவிட்டார், இவர் சில்லாலை நீக்கிலாப்பிள்ளை மரியம்மா தம்பதிகளின் புதல்வியும், கோர்னி, நிபாட்சன் ஆகியோரின் அன்புத்தாயாரும், லீலா, சரோ, பத்மா, மேரிஜோசம், நடா, செல்வம், டெய்சி, அனுஷியா, அருமைநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கனகபுரம் சேமக்காலையில் இன்று 05-11-86 மாலை 4 மணியளவில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

பெ. பரராஜசேகரன்,
(C 5594) J. P. கிளிநொச்சி.

நாகமுத்து சிவப்பிரகாசம்

குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் சண்டிலிப்பாயில் வசித்தவருமாகிய நா சிவப்பிரகாசம் காலமானார். இவர் முன்னாள் கெக்கிராவ பிரபல வர்த்தகர்கள் P. சுப்பிரமணியம் சக சகோதரர்களின் பிரதம பங்காளரும், சண்டிலிப்பாய் அம்பாள் மிஷனரி மையாளருமாவார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், காலம்சென்றபாக்கியம், சிரோண்மணி, செல்லேயா, தர்மலிங்கம், கெங்கையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாதேவன், கணேசமூர்த்தி, காலம்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார். இவரின் ஈமக்கிரியைகள் நடைபெற்று நேற்று (4-11-86) செவ்வாய்க்கிழமை பிற்பகல்பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகிறோம்.

மனைவி, சகோதரர்கள், மைத்துனர்.

(C 5593)